**தேசிய சமுதாய நீர் நம்பிக்கைப் பொறுப்பு – 2014**

---

தேசிய சமுதாய நீர் நம்பிக்கைப் பொறுப்பின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1443 ஆம் இலக்க மற்றும் 2011 திசெம்பர் 30 ஆந் திகதிய தேசிய சமுதாய நீர் நம்பிக்கைப் பொறுப்பு உரித்துறுதியின் 16 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டைத் தீர்மானிப்பதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நம்பிக்கைப் பொறுப்பின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நம்பிக்கைப் பொறுப்பின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிரயாம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, தேசிய சமுதாய நீர் நம்பிக்கைப் பொறுப்பின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்ட ரூபா 58,901,841 பெறுமதியான ஆதனங்கள், பொறித்தொகுதி, உபகரணங்கள் ஆகியவற்றிக்கு மீளாய்வாண்டின் போது பெறுமானத்தேய்வுக்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று என்பன நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 144,535 ஆக இருந்தும் நிதிக்கூற்றில் 2013 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 140,515 தொகையான வட்டி வருமானமொன்று உள்ளடக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் வருமானம் அந்த அளவினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 44,167 தொகையான பெறவேண்டிய வட்டி வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்தின் போது நாட்குறிப்பு இலக்கம் 134 இன் மூலம் நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 6,205,462 இனால் அதிகரித்தற்குரிய தகவல்கள் மற்றும் அதன் செலவுக் குறிப்பில் இடப்பட்ட கணக்கிற்குரிய எந்த விளக்கமளித்தல்களும் எழுத்துமூல சான்றுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

ரூபா 8,500 கூட்டுப்பெறுமதியான மூன்று காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய செலவினம் ரூபா 18,216 ஆக இருந்ததுடன் அதில் உள்ளடங்கியுள்ள கட்டிட வாடகை ரூபா 10,697 தொகை 2013 ஆம் ஆண்டு முதல் தீர்க்கப்படாது முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஆ) நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதி போதியளவில் இல்லாமையினால் சமூக அடிப்படை அமைப்புக்களை பதிவு செய்யும் கட்டணங்களிலிருந்து ரூபா 763,229 தொகை 2012 ஆம் ஆண்டின் போது தேசிய சமுதாய நீர் நம்பிக்கைப் பொறுப்பின் பதவியணியினருக்கு சம்பளம் செலுத்துவதற்காகவும் ரூபா 531,346 தொகை மீளாய்வாண்டின் போது மாவட்ட அலுவலகங்களின் மீண்டெழும் செலவினங்களுக்காகவும் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்குச் செலுத்தவேண்டியதாகவும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சிலிருந்து கிடைக்க வேண்டியதாகவும் ரூபா 1,294,575 தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதனைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் தேசிய சமுதாய நீர் நம்பிக்கைப் பொறுப்பின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 88,218 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,109,256 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 1,021,038 வீழ்ச்சியொன்றைக் காண்பித்தது. சமூக அபிவிருத்திச் செலவினம் ரூபா 14,573,087 இனால் குறைவடைந்திருந்த போதிலும், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சிலிருந்து கிடைத்த பணம் ரூபா 13,477,661 இனால் குறைவடைந்தமையும் நிர்வாக மற்றும் தாபனச் செலவினங்கள் ரூபா 2,357,348 அதிகரித்தமையும் மேற்கூறிய வீழ்ச்சிக்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

தேசிய சமுதாய நீர் நம்பிக்கைப் பொறுப்பினால் சமூக அடிப்படையிலான அமைப்புக்களின் நீர் மற்றும் சுகாதார வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் சமூக அடிப்படையிலான அமைப்புக்களின் தன்னிறைவை ஏற்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 45,521,008 தொகை செலவிடப்பட்டு சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்கு நீர்பம்பி மற்றும் உபபாகங்கள் வழங்கப்பட்டிருந்தது.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சினால் 2012 ஆம் ஆண்டின் போது தேசிய சமுதாய நீர் நம்பிக்கைப் பொறுப்பிற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 52,560,198 தொகையான சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு முறையான பிரகாரம் கையேற்பதற்கு நம்பிக்கைப் பொறுப்பினால் மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமூக அடிப்படையிலான அமைப்புக்களை பதிவு செய்யும் கட்டணக் கணக்கில் ரூபா 3,530,700 தொகை ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. சமூக அடிப்படையிலான அமைப்புக்களை பதிவு செய்வதற்காக அறவிடப்படுகின்ற கட்டணம் அந்த அமைப்புக்களுக்கு நீர் மற்றும் சுகாதார வசதிகளை வழங்குவதற்காக பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஆ) கணக்கீடு